
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. யோனா 1
2. பரிசுத்த ஆவியானவரின் பணி 9
3. பாலைவனச் சோலை 13
4. வெகு பிரபலமான சில பொய்கள் 16
5. வியாதி பாவத்தின் விளைவா? 20
6. விக்கிரக ஆராதனை 22
7. பரலோக ராஜ்யத்தில் யார் பெரியவர்கள் 25
8. வேதாகமம் மட்டும் போதுமா? 28
IS THE BIBLE ENOUGH?

# THIRUMARAI AASAAN

Editor :
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 | NOVEMBER 1994 | Issue - 11


## ஆசிரியவுரை

## யோனா (Jonah)

அமித்தாயின் குமாரனாகிய இந்த யோனாவைப் பற்றி நமக்குப் பெரிய அறிமுகம் தேவையில்லையென்று எண்ணுகிறேன். ஏனெனில், சின்ன வயதில் ஞாயிறு பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்தாலே, நிச்சயமாக இவரைப் பற்றி நாம் போதிக்கப்பட்டிருப்போம். அவ்வாய்ப்பைப் பெறாதவர்கள் கூட, ஏதாவது ஒரு சந்தர்ப்புத்தில் இந்த தீர்க்கதரிசியைக் குறித்து பிரசங்கமாகக் கேட்டிருப்போம். யோனா என்றாலே, அநேகராகிய நமக்கு மீன் தான் ஞாபகத்திற்கு வரும். அந்தக் புத்தகத்தை பத்திரமாக வைத்திருக்கும் நாம், அந்தக் புத்தகத்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டியதை சௌகரியமாக மறந்திருப்போம்.

இப்பொழுது, யோனா மீன் வயிற்றுக்குள் சென்றதைப் பற்றியும், அங்கிருந்து எப்படி வெளியே வந்தார் என்பதைப் பற்றியும் சொல்லி, மீண்டும் உங்களை ஞாயிறு பள்ளிப் பிள்ளைகளாக மாற்ற விரும்பவில்லை. இந்த யோனாவை, நாம் ஒரு வித்தியாசமான கோணத்தில் பார்க்க உள்ளோம்.

பழைய ஏற்பாட்டு சிறிய தீர்க்கதரிசிகள் 12 பேரில் இந்த யோனா மிகவும் வித்தியாசமானவர். இந்த தீர்க்கதரிசன புத்தகத்தில் உள்ள சம்பவங்களும், மற்ற பதினொரு புத்தகங்களைவிட மாறுபட்டிருக்கிறது. அவைகளில் சில.

1. அந்நிய மண்ணில் தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரே தீர்க்கன் யோனா தான்.
2. அந்நிய மக்களுக்குப் பிரசங்கித்த தீர்க்கதரிசி இவன்தான்.

3. மத்திய தரைக்கடல் வழியாகப் பிரயாணம் மேற்கொண்ட தீர்க்கதரிசியும் இவன்தான்.

4. நமதாண்டவராகிய இயேசுவால் குறிப்பிடப்படும் ஒரே சிறிய தீர்க்கனும் இவனே. (லூாக். 11 : 29)

5. இப்புத்தகத்தில் தான் அற்புதங்கள் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது.

நான்கு அதிகாரங்களை கொண்ட இப்புத்தகத்திலிருந்து நான்கு பாடங்களை நாம் கற்றுக்கொள்வோம்.

## I. யோனா - தேவனை விட்டு விலகி ஓடினான்:-

பிதாவாகிய தேவன் இவனை, நினிவே நகரத்திற்குப் போகும்படி கட்டளையிடுகிறார். இந்த நினிவே, ஆதிகாலம் முதல் இருந்த பாரம்பரியம் மிக்க பட்டணம். ஆதியாகமம் 10ம் அதிகாரத்தில் சொல்லப்படும் பராக்கிரமசாலியாகிய "நிம்ரோத்" மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம் என்று நம்பப்படுகிறது. சிறப்புமிக்க நதியாகிய "டைக்ரீஸ்" நதியோரத்தில் இப்பட்டணம் இருந்துள்ளது. இப்பட்டணத்தின், அக்கிரமம் கர்த்தருடைய சமூகத்தில் எட்டின படியாலே, அதற்கு விரோதமாகப் பிரசங்கிக்கும்படி தேவன் யோனாவைப் பணிக்கிறார். (வசனம் 1 : 2)

ஆனால், யோனாவோ தர்ஷீசுக்குப் போகும் ஒரு கப்பலைக் கண்டு, அதில் ஏறிப் போகிறான். பூகோளரீதியாக நினிவே, வட கிழக்கிலும், தர்ஷீசு மேற்கிலும் உள்ளது. அதாவது, தேவனுடைய கட்டளையை ஏற்க மறுத்த யோனா, கிட்டத்தட்ட "நேர் எதிரே" பிரயாணம் செய்கிறான். இப்படி இவன் மேற்கொண்ட பிரயாணத்தை வேதாகமம் இவ்வாறாகச் சொல்கிறது.

"..... கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி ...." (வசனம் 1 : 3) என்று.

யோனாவினிமித்தமாக, சமுத்திரத்தில் பெருங்காற்றை கர்த்தர் கட்டளையிட்டார். கப்பல் உடையும் அபாயம் நேரிட்டு, கப்பலில் இருந்த அனைவரும் பயந்து நடுங்குகின்றனர். யோனாவோ கப்பலின் அடித்தட்டில் நிம்மதியாக உறங்குகிறான். யாராலே துன்பம் வந்தது என்று தங்களால் ஊகிக்க முடியாததால், பழைய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாகிய "சீட்டுப்போடுதல்" முறையைப் பின்பற்றுகின்றனர். (யோசு 7 : 16 - 18 எண் 26 : 55, 1 நாளா 24 : 5) சீட்டு, யோனாவின் பேருக்கு விழுந்து, அவனை விசாரிக்கும்பொழுது, "அவன் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் ...." என்று ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கின்றான். (1 : 10)

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத ஒருவன் ஓடி ஒளிந்து கொள்ளுதல், ஏதோ யோனாவால் தான் துவக்கப்பட்டதென்று நினைக்க வேண்டாம். சிருஷ்டிப்பின் காலந்தொட்டே இருந்து வருகின்ற ஒன்றே. ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் புசிக்க வேண்டாமென்று தேவன் விலக்கின கனியைப் புசித்து தேவ கட்டளையை மீறின போது, ". . . . . கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டார்கள்" (ஆதி 3 : 8, 9)

நண்பரே, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகப் பாவம் செய்து "எங்காவது" ஓடிப்போய் ஒளிந்து கொண்டு தப்பித்துக் கொள்ளலாமென்று நினைத்து ஏமாந்து போக வேண்டாம். தீமை செய்யத் துணிகரங்கொள்ளாதே. விருட்சங்களுக்குள் ஒளிந்து கொண்ட ஆதாம், ஏவாளையும், கப்பலின் அடித்தட்டிலே போய் ஒளிந்து கொண்ட யோனாவையும் சரியாகப் பிடித்த தேவன், நம்மை மட்டும் தப்ப விடுவாரா?

தப்பிக்க வழியே இல்லை என்பதையும், தேவனுக்கு முன்பாக மனிதனின் நிலை எப்படிப்பட்டது என்பதையும் தாவீது அரசன் கனகச்சிதமாக விவரிக்கிறார் கவனியுங்கள். "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது. இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும் உமக்கு இருளும் வெளிச்சமும் சரி (சங். 139 - 7 - 12).

ஆம், தேவனுடைய வசனத்திற்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருப்போமானால், நம்முடைய நிலையை தற்பரிசோதனை செய்து பார்ப்போம். ஒருவேளை தேவன் அன்றுபோல உடனுக்குடன் நம்மைச் சந்திக்காமல் இருக்கலாம். ஆனால், "நியாயத்தீர்ப்பின்" நாளென்று ஒரு நாளைக் குறித்திருக்கிறார். (அப். 17 : 31) அந்நாளில் நாம் என்ன செய்வோம்? ஆகவே தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஓடின யோனா போல் இல்லாமல் எப்புன்னேயின் குமாரன் காலேப் போல, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, உத்தமாய்ப் பின்பற்றுவோம் (எண். 32 : 11).

## II. யோனா - தேவனிடத்திற்கு ஓடி வருகிறான் :-

ஒன்றாம் அதிகாரத்தில் தேவனை விட்டு விலகி ஓடின யோனா, இரண்டாம் அதிகாரத்தில் தன்னுடைய தேவனிடத்திற்குத் திரும்பி வருகிறான். தூரமாக ஓடி மறைந்து கொள்ளலாம் என்று மனப்பால் குடித்த யோனா, தன்னுடைய முயற்சியில் முற்றிலும் தோல்வியுற்ற நிலையில், தேவனிடத்திற்குத் திரும்புகிறான்.

ஆம், தன் மீறுதலை உணர்ந்து, வருந்தி, மனந்திரும்பி மீனின் வயிற்றிலிருந்து தேவனை நோக்கி மன்றாடுகிறான். அவன் செய்த அந்த ஜெபம், அவனுடைய இருதயம் எவ்வளவு தூரம் மாறியிருந்தது என்பதைப் பிரதிபலிக்கிறது.

வாசகரே! நம்முடைய பாவங்கள், மீறுதல்கள் எவ்வளவு கொடியதாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தையை விட்டு நாம் எவ்வளவு தூரம் போயிருந்தாலும், உண்மையாக மனம்மாறும் பொழுது அவர் செவி கொடுக்கிறார். **மனம்திருந்தும் ஒவ்வொருவருக்கும் அவர் மிகவும் சமீபமாயிருக்கிறார்.** (சங். 34 : 18) பத்சேபாளிடத்தில், தாவீது பாவத்திற்குட்பட பின்பு, நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது, எழுதின சங்கீதத்தில் தாவீது இவ்விதமாகச் சொல்கிறார். **"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவி தான்; தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்"** (சங் 51 : 17)

தேவனுக்கு விரோதமான நம்முடைய பாவம், அக்கிரமம் இவைகளின் காரணமாக, நாம் தேவனை விட்டு எவ்வளவு தூரம் விலகிப்போயிருந்தாலும் சரி, தற்போது நம்முடைய நிலை எவ்வளவு கேடுபாடுள்ளதாக, கேவலமானதாக இருந்தாலும் சரி கவலை வேண்டாம். இந்நிலையில் எனக்கு விமோசனம் உண்டா என்று ஏங்கி, கலங்க வேண்டாம். மீனின் வயிற்றிலிருந்து மன்றாடின யோனாவுக்கு செவிகொடுத்த தேவன் உனக்கும், எனக்கும் செவிகொடுப்பார். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. நம்முடைய மனமாற்றம் உண்மையானதாக இருக்க வேண்டும்.

உண்மையாக மனந்திரும்பும் ஒவ்வொருவரையும் பிதாவாகிய தேவன் இருகரம் நீட்டி ஏற்றுக்கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே, இயேசுக்கிறிஸ்து ஒரு உவமையைச் சொன்னார். லூக் 15 : 11 -24 ஆகிய வசனங்களில் இது உள்ளது. இதற்கு நாம் "கெட்டகுமாரன் கதை" என்று பெயர் சூட்டியுள்ளோம். ஆனால், "மனந்திருந்திய மைந்தன்" என்பதே பொருத்தமான பெயர்.

ஒரு வேளை, யோனாவைப்போல், தேவனுடைய வார்த்தையை மீறி, தேவனிடமிருந்து விலகி ஓடியிருந்தாலும் பரவாயில்லை - அதே

யோனாவைப் போல் தேவனிடத்திற்கு மனம்மாறி திரும்புவோம். ஆயத்தமா?

## III. யோனா - தேவனோடு ஓடினான்:-

தேவனை விட்டு விலகி ஓடின யோனா - மனந்திருந்தி மீண்டும் தேவனிடத்திற்கு ஓடி வந்தான். இப்பொழுது தேவனோடு கூடச் சேர்ந்து ஓடுகிறான். ஆம், "யோனா, எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே, நினிவேக்குப் போனான் . . . . " ( 3 : 3) என்று வசனம் சொல்கிறது. அவருடைய வார்த்தையின்படி செய்கிற யாவரும் கர்த்தரோடு ஓடுகிறவர்களே.

அன்பரே, நம்முடைய ஓட்டம் எப்படியுள்ளது? தாறுமாறாய் ஓடுகிற பெண் ஒட்டகத்தைப் போல் ஓடிக்கொண்டுள்ளோமா? அல்லது சேரும் இடம் தெரியாமல் ஓடும் வெற்று ஓட்டமா? அல்லது மூன்றாம் அதிகாரத்து யோனாவைப் போல கர்த்தருடைய வார்த்தையின்படி ஓடிக்கொண்டுள்ளோமா? அவருடைய வார்த்தையின்படி ஓடுவது உண்மையானால், ஆவியின் பட்டயமாகிய, வேதவசனம் என்னும் வழிகாட்டியை மாதிரியாக வைத்து ஓட வேண்டும்.

இயேசுக்கிறிஸ்து, இப்பூமியில் வாழ்ந்தபொழுது "தேவசித்தம்" என்னும் வழிகாட்டியை மாதிரியாக வைத்து ஓடினார். ஆகவே தான் அவர் எத்தனையோ பாடுகளைச் சந்திக்க நேர்ந்தாலும் "பாதை மாறவில்லை". இன்று, தேவனுக்காக ஓடுகிறேன் என்று சொல்கின்ற அநேகர், தவறாக ஓடிக் கொண்டுள்ளார்கள். வேகமாக ஓடுகின்றனர். அநேகருடைய பாராட்டுக் கிடைப்பதால், 'பாதை மாறி' ஓடுகிறோமென்று கூடத் தெரியாமல் தலைதெறிக்க ஓடுகின்றனர். பிரயோஜனமில்லை. பரிசு கிடைக்கப் போவதில்லை. வசனம் நம்மை, கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறபடியால் (யோவா 12 : 48) வசனத்திற்கு விரோதமான ஓட்டத்தால் பயனேதுமில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய கிறிஸ்தவ ஓட்டத்திற்கு " கிறிஸ்துவை " வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டார். நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று சொல்கிறார். (1 கொரி 11 : 1) "கிறிஸ்துவை" அவருடைய வாழ்க்கையை வழி காட்டியாக வைத்து ஓடினபடியால் தான் அவரால் ஓட்டத்தை முடிக்க முடிந்தது. விசுவாசத்தைக் காத்துக் கொள்ள முடிந்தது. (2 தீமுத் 4 : 7)

நீங்களும், நானும் இன்று வேதவசனத்தை மாதிரியாக வைத்து, வழிகாட்டியாக வைத்து ஓட வேண்டியவர்களாயுள்ளோம்.

வசனம் சொல்கிறபடியெல்லாம், செய்து என்னால் ஒரு வெற்றிகரமான ஓட்டத்தை ஓடி முடிக்க முடியுமா என்று திகைக்கிறீர்களா? முடியும். முடியும். இரக்கமுள்ள நம்முடைய தகப்பன், நம்மால் முடியாத ஒன்றையும் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை.

வேதாகமத்தை எடுத்துப் புரட்டிப் பாருங்கள். தேவமனிதர்கள் பலர் வெற்றிகரமாக ஓடி, சுகமாக இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை தெரியும். இவ்வளவு பெரிய வேதபுத்தகத்தை அவ்வளவு சீக்கிரம் புரட்ட முடியுமா என்று மலைக்கிறீர்களா? சரி, எபிரேயர் 11ம் அதிகாரத்திற்கு வாருங்கள். அங்கே, பரிசுத்தவான்களின் பட்டியலைத் திரையிட்டுக் காட்டிவிட்டுத்தான், பன்னிரண்டாம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் இப்படியாகச் சொல்கிறார். "ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபி 12 : 1) என்கிறார்.

ஆம், மேகம் போன்ற திரளான சாட்சிகள் ஓடி முடித்திருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்றி நம்மாலும் ஓட முடியும். மேற்சொன்ன வசனத்தின்படி நாம் 3 காரியங்களைச் செய்ய வேண்டும். 1. பாவத்தைத் தள்ள வேண்டும். 2. இயேசுவை நோக்கி ஓட வேண்டும். 3. நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓட வேண்டும்.

நாம் இந்த 3 காரியங்களையும் செய்து, யோனாவைப் போல், கர்த்தரோடு ஓடுவோம்.

## IV. யோனா - தேவனுக்கு முன்பாக ஓடினான் : -

யோனா தீர்க்கன், வேண்டாவெறுப்பாகக் கொடுத்த எச்சரிப்பின் செய்தியைக் கேட்டு, மகா நகரமாகிய நினிவேயின் மக்கள் மனந்திரும்புகின்றனர். தங்களுடைய பொல்லாத கிரியைகளை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் கண்டு, அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (3 : 10)

தேவனின் இந்த நிலை யோனாவுக்கு மிகுந்த எரிச்சலையும், கோபத்தையும் கொடுக்கிறது. தேவனுடைய முடிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவன் புலம்புவதைப் பாருங்கள்! ஆ, கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன் என்றான். (4:2)

தேவனுடைய பணியில், அவருடைய முடிவில் குறுக்கிடுவதன் மூலம் யோனா அவருக்கு முன்பாக ஓடுகிறான்.

மனிதனுடைய பெலன் மற்றும் அவனுடைய தகுதியைப் பற்றி எரேமியா தீர்க்கன் இவ்வாறு சொல்கிறார். "கர்த்தாவே

மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது, நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே 10 : 23) ஏசாயா தீர்க்கன் இன்னுமே தெளிவாகக் கூறுகிறார். "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும், என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும், என் நினைவுகலும் உயர்ந்திருக்கிறது. (ஏசா 55 : 9)

இதுதான் மனிதனுடைய நிலை என்றால், இவன் எப்படி சர்வ வல்லமையுள்ளவருக்கு ஆலோசனை சொல்லி, அவருடைய வழியைக் குறை சொல்லமுடியும்? மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்த பிரசங்கியே, மனந்திருந்தினவர்களுக்கு தேவன் இரங்கும் பொழுது குறுக்கே நிற்கலாமா? மனிதனைப் போலவே, தேவனும் எண்ண வேண்டுமென்று, எண்ணுவது மதியீனமில்லையா?

தேவனுடைய திட்டத்தை விளங்கிக் கொள்ள நம்முடைய அறிவு போதவில்லையென்றால் 'மௌனம்' காப்பது தானே சிறந்தது. அதைவிடச்சிறந்தது, "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சாமுவேலைப் போல சொல்வது தான் (1 சாமு 3 : 10) அதைவிடுத்து அவருக்கு முன்பாக நாம் ஏன் ஓடவேண்டும்?

பெரும்பாலானவர்களாகிய நாம், இந்த விஷயத்தில் யோனாவைப் போல் தான் நடந்து கொள்கிறோம். சர்வ வல்லவருடைய அநந்த ஞானத்தால் வரும் ஆலோசனையை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், அதற்கு முன்பாக ஓட விரும்புகிறோம். தேவச்சித்தம் நம்முடைய விருப்பத்தோடு ஒத்து வராதபொழுது, நம்முடைய விருப்பம் நிறைவேற வேண்டுமென்று அடம் பிடிக்கிறோம்.

நண்பரே! தேவசித்தத்தை புறக்கணித்து, வசனத்தின் ஆலோசனையை மீறி அடம்பிடித்து காரியத்தைச் சாதிப்போமானால், அதன் விளைவு சமாதானமாக இருக்காது. நமக்கு மாத்திரமல்ல, நமது சந்ததிக்கே பேராபத்தை, ஆசீர்வாதக் குறைவைக் கொண்டு வரும்.

முன்னொரு காலத்தில் சோதோம் கொமோராவை அழிக்க தேவன் முடிவு செய்து, அப்பட்டணத்தில் வசித்த லோத்துவைக் காப்பாற்ற விரும்பிய தேவன், ". . . . . . . . இந்தச் சமபூமி எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" என்றார் (ஆதி 19 : 17) தேவனுடைய ஆலோசனைக்கு முன்னாக ஓடின லோத்து, "அப்படியல்ல ஆண்டவரே" என்று சொல்லி (வ. 18) அருகாமையிலுள்ள ஊருக்குப் போக விண்ணப்பித்து, அவன் கேட்டுக்கொண்டபடியே அங்கு போய்ச் சேர்ந்தான். (வ. 19, 20) அதற்குப் பின் என்ன நடந்தது என்பதை அவ்வதிகாரம் முழுவதும் வாசித்துப் பார்த்தால், தேவ ஆலோசனைக்கு கீழ்ப்படிய மறுத்து, மாற்று

ஆலோசனை கொடுப்பது எவ்வளவு பெரிய தவறு என்பது தெரியவரும்.

அருமையான வாசகரே, முதலாம் அதிகாரத்து யோனாவைப் போல் தேவனை விட்டு விலகி ஓடவோ, நான்காம் அதிகாரத்து யோனாவைப் போல், தேவ ஆலோசனையை மதிக்காமல் அவருக்கு முன்னாக ஓடவோ வேண்டாம். இரண்டாம் அதிகாரத்து யோனாவைப் போல், மனந்திருந்தி கர்த்தரிடத்திற்கு ஓடி வருவோம். அதைவிடக் குறிப்பாக மூன்றாம் அதிகாரத்து யோனாபோல், என்றென்றும் கர்த்தரோடு ஓடுவோம்! நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே, பொறுமையோடு ஓடுவோம்! பவுலைப் போல இறுதிவரை ஓடுவோம். வாடாத ஜீவகிரீடத்தைப் பெறுவோம்!

கர்த்தர் உங்களுடனே கூட இருந்து ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

EZS ராஜநாயகம்.

## நமது ஓட்டம் எப்படிப்பட்டது?

பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள் ஆகிலும் ஒருவனே பந்தயத்தை பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள் அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும் படிக்கு அப்படி செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்.

(1 கொரி : 9 : 24, 25)

# பரிசுத்த ஆவியானவரின் பணி

பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் அவருடைய பணி பற்றியும் பலர் குழப்பமடைந்துள்ளனர். அவற்றை நீக்கவே இக்கட்டுரை தொடர் வருகிறது.

பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய பணியையும் முற்றிலுமாக ஒதுக்கித்தள்ளிவிடும் பலமக்கள் இவ்வுலகில் இருக்கும் இவ்வேளையில், மறுபக்கத்தில், பலர் நேர்மாறான நிலையில் நின்று கொண்டு, பரிசுத்த ஆவியானவர் அற்புதங்களை இன்று செய்து வருகிறார் என போதிக்கின்றனர். ஆனால், வேதாகமம் என்ன போதிக்கிறது?

தேவத்துவத்தின் மூன்றாவது ஆளாக, ஆளுமை செய்பவராக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். தேவனோடும் கிறிஸ்துவனோடும் அவர் எப்போதும் இருந்து வந்துள்ளார். இனியும் எப்போதும் இருப்பார். சிருஷ்டிப்பின் போதும், பழைய ஏற்பாடு காலத்தின் முழுவதும் நடைபெற்ற எல்லா பெரிய காரியங்களிலும் அவர் பங்கேற்றுள்ளார். கிறிஸ்துவின் காலத்திலும் அவருடைய அப்போஸ்தலர்களுடைய காலத்திலும் பரிசுத்த ஆவியானவரின் வருகை பற்றியும் செயல்கள் பற்றியும் நாம் இப்போது காண்போம்.

கிறிஸ்து பிறந்த காலத்திற்குத் திரும்பிச் சென்றால், வேதாகமம் கீழ்க்கண்டவாறு கூறுவதை நாம் கவனிக்க முடியும். "இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது; அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான், அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன், இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று

பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான் (மத் 1 : 18 - 25) இவை யாவற்றிலும் பரிசுத்த ஆவியானவரின் பங்கை தயவு செய்து கவனித்துப்பாருங்கள் "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என ஏசாயா தீர்க்க தரிசனமாகக் கூறி, எழுத பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலே காரணம். அடுத்து, மரியாள் பெற்றெடுத்த குழந்தை பரிசுத்த ஆவியானரால் கருப்பெற்று உண்டானது என்று விளக்கப்பட்டுள்ளது. இறுதியாக, தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்; அதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று பொருள்".

லூக்கா 1ம் அதிகாரத்தின்படி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், சகரியா, எலிசபெத்து தம்பதியர்களும் ஒரு குழந்தையைப் பெற்றனர். அவன் யோவான் எனப் பெயரிடப்பட்டான், பின்னர் தேவனுடைய கற்பனைகளுக்குப் பணிந்தோருக்கு அவன் ஞானஸ்நானம் கொடுத்தபடியால் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டான். கிறிஸ்துவின் முன்னோடியும், கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தவும் அனுப்பப்பட்ட யோவான் கூறினான். "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரம் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான், இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல

இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (மத். 3 : 11 - 17) நாம் ஏற்கனவே பார்த்தபடி, பரிசுத்த ஆவியானவரால் மரியாள் குழந்தையைப் பெற்றெடுத்தாள்; இவ்வாறாக, இவ்வுலகில் கிறிஸ்து பிறந்தார். பின்னர், இயேசு வளர்ந்து பெரியவரான போது யோவானால் ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுகி) பெறுகிறார் என்பதைக் காண்கிறோம். தேவன் இக்காரியத்தில் பிரியப்பட்டார் என்பதற்கு அடையாளமாக, தேவனுடைய ஆவியானவர் அவர் மேல் இறங்கினார். "நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என தேவன் கூறினார்.

" . . . . . . . .. . . இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்" என மத்தேயு 4 : 1ம் வசனம் கூறுகிறது. என்றாலும், சந்தேகமின்றி ஆவியின் வசனத்தைக் கொண்டே சாத்தானின் சோதனைகளை அவர் வெல்ல முடிந்தது.

கிறிஸ்து தேவ ஆவியை அளவில்லாமல் பெற்றார் என யோவான் 3 : 34ம் வசனத்தில் நாம் படிக்கிறோம். கிறிஸ்து ஆவியை அளவில்லாமல் பெற்றார் என்றால், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் எந்த விதத்திலும் அவருக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை என்று பொருள். அதே சமயம், கிறிஸ்து ஆவியை அளவில்லாமல் பெற்றார் எனக் கூறும் போது, மற்றவர்கள் ஆவியை அளவோடு பெற்றனர் என்றும், ஆவியின் வல்லமை இருந்தாலும் கூட அவர்கள் செய்யக் கூடிய செயல்களுக்குக் கட்டுப்பாடுகள் இருந்தன என்றும் பொருள்.

கிறிஸ்து சென்ற பிறகு, அவருக்கு பிரதிநிதிகளாகச் செயல்பட்டு, அவர் விட்டுச் செல்லும் பணியைத் தொடர 12 பேரை தேர்ந்தெடுத்தார். இவர்கள் அப்போஸ்தலர்கள் என்றழைக்கப்பட்டனர். தொடக்க முதல் அவரோடு இருந்தவர்களும், அவருடைய உயிர்தெழுதலின் சாட்சிகளாகவும் அவர்கள் இருந்தனர். அவர்களிடம் அவர் கூறினார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோ 16 : 7) தொடர்ந்து அவர் கூறும் போது "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோ 16 : 13) என்றார். மேலுமாக தேற்றரவாளனை அடையாளங்கண்டு கொள்ள அவர் கூறினார், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே

எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோ. 14 : 26)

யோவானின் கூற்றுப்படி, பரிசுத்த ஆவியானவர் பல காரியங்களைச் செய்வார், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டது உட்பட இன்னும் அப்போஸ்தலர் நடபடிக்கள் 2ம் அதிகாரத்தில் நாம் காணும் இதரக் காரியங்களையும் அவர் செய்வார். அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியானவர் தேற்றுவார், சத்தியத்தில் வழி நடத்துவார், கிறிஸ்து போதித்திருந்த எல்லா காரியங்களையும் அவர்களுக்கு நினைப்பூட்டுவார், அந்நிய மொழிகளில் பேசும் திறனை அளிப்பார். தேவனால் அவர்கள் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்களுக்கு உறுதி செய்ய அற்புதங்களைச்செய்வார்கள்.

செய்ய வேண்டிய பணிகள் யாவற்றையும் அப்போஸ்தலர்கள் தனியாகச் செய்யக்கூடாததாக இருந்தது. எனவே, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்களும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அவர்கள் மேல் தங்கள் கைகளை வைக்கும் அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்குக் கர்த்தர் கொடுத்தார்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற அளவில் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்டிருந்தனர். சீடர்களோ கைகளை மேலே வைக்கும் அளவில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர். குறிப்பிட்ட சீடர்களின் மேல் மட்டுமே அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து இந்த வல்லமையை அவர்கள் அடையச் செய்த போதிலும், கைகளை மேலே வைக்கும் அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள், மற்றவர்களுக்கு அந்த வல்லமையை கொடுக்க இயலவில்லை, இறுதியாக பிற மக்கள் அனைவரும் சாதாரண அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டதாக அப்போஸ்தலர் நடபடி 2 : 38 வசம் கூறுகிறது.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் வழியாகவும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்கள் மூலமாகவும் அற்புதங்களைச் செய்யவும், தேவனுடைய வார்த்தையை எழுத அவர்களை ஏவவும் கிரியை செய்தார். புதிய ஏற்பாடு வந்த பின்னர், ஆவியானவர் வசனத்தின் வழியாகவும் வசனம் போதிக்கிற பிரகாரம் நமக்குள்ளும் கிரியை செய்கிறார். வரப்போகிற இதழ்களில் தொடர்ந்து படிக்க இருக்கிறோம்.

J.C. சோட்.

## பெண்கள் பகுதி

### "பாலைவனச் சோலை"

நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம், தான் இந்த "ரூத்" புத்தகம். மிக அழகாக, சுருக்கமாக ஒரு பெண்ணின் குணநலன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது. அன்பு, பக்தி, மீட்பு ஆகிய இம்மூன்றும் இச்சரித்திரத்தில் ஆழமாக பதிந்திருக்கின்றது. மோவாப் என்பது சவக்கடலுக்கு அருகிலுள்ள ஓர் பிரதேசம். இந்த மோவாபியர், லோத்தின் வம்சா வழியாக வந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. இவர்கள் 'கேமோஸ்' என்கிற தெய்வத்தையும், வேறே பல விக்கிரகங்களையும் வணங்கி வந்தவர்கள்.

நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து வந்த நாட்களில் ஜனங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனதினால், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று. எனவே பெத்லேகம் ஊரானாகிய எலிமலேக்கு தன் மனைவியாகிய நகோமியுடனும், மக்லோன், கிலியோன் என்னும் தன் இரண்டு குமாரரோடும் கூட மோவாப் தேசத்திற்குப் போய் அங்கே இருந்தான். (ரூத் 1 : 2 ). பஞ்சம் பிழைக்கப் போன அந்த தேசத்திலே எலிமலேக்கு இறந்து போகிறான். நகோமி தன் இரு குமாரர்களுக்கும் மோவாபிய ஸ்திரீகளில் பெண் கொள்கிறாள். அவர்களில் ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத். சற்றேறக்குறைய பத்து வருடம் கழித்து தன் இருமக்களையும் பறிகொடுத்து நகோமி தன் மருமக்களோடு தனித்தவளாகிறாள். மீண்டும் பெத்லகேமில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இரங்கி அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டு ஊர் திரும்புகிறாள்.

வரும் வழியில் நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி, தங்கள் தாய் வீட்டிற்குத் திரும்பிப் போகும்படி கூறுகிறாள். இருவருமே திரும்பிப் போக மறுக்கின்றனர். (1:10). தொடர்ந்து நகோமி வற்புறுத்த ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போய்விடுகிறாள். ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொள்கிறாள். ரூத் 1 : 16ல் "அதற்கு ரூத் : நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்று கூறி அவள் பின்னே வரத் தீர்மானிக்கிறாள். அவள் உறுதியைக் கண்ட நகோமி அவள் தன்னோடு தொடர்ந்து இருக்க சம்மதிக்கிறாள்.

பிறகு, ரூத், தன் மாமியாகிய நகோமியின் ஆலோசனைப்படி கோதுமை மணி பொறுக்கிக் கொள்ள வயல்வெளிக்குச்

செல்கிறாள். அந்த வயல் நில மானது நகோமியின் உறவின் முறையானும், செல்வந்தனு மாகிய போவாசுக்கு சொந்த மானதாயிருந்தது. அங்கே அவளுக்கு போவாஸின் கண் களில் தயை கிடைத்தது. "உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடு வாராக; இஸ்ரவேலின் தேவனா கிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்" (ரூத். 2 : 12).

பின்பு சுதந்தரவாளியாகிய போவாஸ் சகல ஜனங்களுக்கும், மூப்பருக்கும் முன்பாக மக்லோனின் மனைவியாகிய ரூத்தை தனக்கு மனைவியாகக் கொண்டான். போவாஸ் ரூத்தை அறிந்தபோது அவள் கர்ப்பந் தரித்து ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றாள். அவனுக்கு ஓபேத் என்று பேரிட்டார்கள் (ரூத் 4 : 17).

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இந்த மோவாபிய ஸ்திரியாகிய ரூத் கிறிஸ்தவப் பெண்களாகிய நமக்கு பல காரியங்களில் முன்மாதிரியாகத் திகழ்கிறாள். ரூத் என்ற பெயருக்கு "சிநேகம்" அல்லது "பட்சம்" என்று பொருள்படும். நியாயா திபதிகள் நியாயம் விசாரித்த நாட்களில் இஸ்ரவேலிலே ஒழுக்கம், பக்தி, நீதி இவைகள் குறைந்து மனம் போல வாழ்ந்து கொண்டிருந்த காலம். பாலைவனமாக காட்சியளித்த அந்நாட்களில் ரூத் அமைதிக்கும், நீதிக்கும், அன்புக்கும் இருப் பிடமாக இருந்து பாலைவனத்தில் ஒரு சோலையாகத் திகழ்கிறாள். மாசில்லா சுத்தமான பெண்ணாக விளங்குகிறாள்.

கணவன் இறந்தபின்பும் தொடர்ந்து தன் மாமியாரோடு வாழ்வதையே தெரிந்து கொண் டாள். தெரிந்து கொள்வதிலே மிகவும் தெளிவாக செயல்படு கிறாள். இனி அவள் சந்திக்கப் போகும் வாழ்க்கை முற்றிலும் வேறுபட்டது. மொழி புதிது, கலாச்சாரம், வணங்கப்போகும் தெய்வம் இப்படி அனைத்தும் புதிய சூழ்நிலை. இருப்பினும் உறுதியாய் தன் மாமியை பின்பற்றுகிறாள். திருமணத் திற்குப் பின் கட்டாயம் ஒவ்வொரு பெண்ணும் தன் கணவன் வீட்டிற்குத் தான் சொந்தக்காரியாக மாறவேண்டும். 1ம் அதிகாரம் 16ம் வசனத்தை வாசிக்கும் பொழுது ரூத்தினுடைய உறுதித் தன்மை நமக்கு விளங்குகிறது. முன் வைத்த காலை பின் வைக்காமல் தன் மாமியோடு துணை போகிறாள்.

பெண்களாகிய நமக்கு இங்கே அருமையான பாடம் ஒன்று உள்ளது. உலகில் எத்தனையோ பிரிவினைக் கூட்டங்கள் மலிந்து கிடக்கின்றன. நாம் அவற்றை எல்லாம் பின்பற்றாமல் எது சரியானது, வேதத்தில் கூறப்பட்டுள்ள சபை எது? கிறிஸ்து அங்கீகரித்த சபை எது? என்று தேடி அதை கண்டுபிடிப்போம். கண்டு கொண்டவுடன் பழைய வாழ்க்கையை முற்றிலும் மறந்து புதிய வழியில் மிக உறுதியாக வசனத்தின் துணையுடன் வெற்றி நடை போடுவோம்.

வயது சென்ற தன் மாமியை வீட்டிலே ஓய்வு எடுக்க வைத்துவிட்டு இவள் வேலை செய்தாள். மாமிக்கு உழைத்து ஆகாரம் கொடுக்க முயன்றாள்.

இன்றைக்கு எத்தனை பெண்கள் தங்கள் மாமியாரை போஷிக்க விரும்புகின்றனர்? எட்டிக் காயாக கசக்கும் மாமியார், மருமகள் களைத்தான் இன்று சமுதாயம் கொண்டுள்ளது. "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத் தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபேசியர் 6 : 2 , 3) என்ற வசனத்தின்படி ஒவ்வொரு பெண்ணும் தங்கள் மாமியை தன் சொந்த தாயாக பாவித்து கனம் பண்ண வேண்டும்.

ரூத் தன் மாமியின் நோக்கத்தை புரிந்து கொண்டு அதன்படி செயல்படுகிறாள். நோக்கமாகிய, திருமணம் தாமதமாகும் பொழுது பொறுமை காட்டுகிறாள். நோக்கத்தை நிறைவேற்ற அவள் தவறான வழியைக் கையாளவில்லை. தன் பொறுமை குணத்தால் சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் செல்வந்தனாய் இருந்த போவாசுக்கு மனைவியாகிறாள். எப்பிராத்தாவிலே இருந்த ரூத்தின் அயலகத்தார் அவளை இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று வாழ்த்து கிறார்கள். (ரூத். 4 : 11). அந்நிய தேவர்களை வணங்கி வந்த ரூத் இன்று யேகோவாவின் பிள்ளை களான இஸ்ரவேல் ஜனங்களின் வரிசையில் இடம் பிடிக்கும் அளவு தகுதியைப் பெற்று விடுகிறாள். ஆண்டவருக்காக வைராக்கியமாக இருக்கும் பொழுது அபரிதமாக நம்மை ஆசீர்வதிக்கிறார்.

ரூத்திற்கு ஓபேத் பிறக்கிறான். ஓபேத் ஈசாயைப் பெறுகிறான். ஈசாயின் வயிற்றில் தாவீது பிறக்கிறான். புகழ்மிக்க ஒரு பேரனுக்கு பாட்டியாகும் சிலாக்கியம் ரூத்திற்கு கிடைக்கிறது. தாவீதின் வம்சத்தில் தான் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தோன்றுகிறார். இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் ஜனனத்தின் வரிசையில் வந்து நிரந்த ஆசீர்வாதத்திற்கு சொந் தக்காரியாக மாறுகிறாள் இந்த ரூத்.

இவள் மாமியார் போற்றும் மருமகள் மட்டுமல்ல உலகம் போற்றும் மருமகளாக திகழ்கின் றாள். இதை வாசிக்கும் சகோதரிகளே! நலமான காரியங்களை தெரிந்தெடுத்து அவற்றில் உறுதியாய் தரித்திருப் போம். தேவன் நம் ஒவ்வொரு வருக்கும் கொடுத்துள்ள சுற்றத் தாரை அன்புடனும், பாசத் துடனும், மரியாதையுடனும் வழிநடத்திச் செல்வோம். தேவன் போற்றும் பெண்களாக வாழ்ந்து அவர் கட்டளைகளை நிறைவேற்ற பாடுபடுவோம். தேவனுடைய ஆசீர்வதிக்கும் கரம், தொடர்ந்து நம்மையும், நாம் சார்ந்திருக்கும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!!

- ரேச்சல் ராஜநாயகம்.

## வெகு பிரபலமான சில "பொய்கள்"

தேவன் "பொய்யுரையாதவர்" (தீத்து 1 : 3) உண்மையில், "தேவனால் எவ்வளவேனும் பொய்யுரைக்க இயலாது" (எபி 6 : 18) "பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்" (யாக். 3 : 14, யோவான் 8 : 32, 17 : 17) என எல்லா மக்களும் எச்சரிக்கப்படுகின்றனர். "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப் போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லை என்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப் போம். அவருடைய வார்த்தை நமக்குள் இராது (1 யோவான் 1 : 6 -10).

மேலே எடுத்தாளப்பட்ட வசனங்கள் தேவனின் பிள்ளைகளுக்கு, அதாவது கிறிஸ்தவர்களுக்கு, கூறப்பட்டவை என்பதையும், தொடர்ந்து பாவிகளாக இருப்போருக்கு அல்ல என்பதையும் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என நாம் விரும்புகிறோம். (எபே 2 : 11 - 22) மாற்கு 16 : 15 - 16, அப். 2 : 36 -38, 41-42, 47).

பலருக்கு விரோதமாக, ஒரு பொய் நம்பப்படக்கூடும் (2 தெச 2 : 10 - 12) ஒரு முதிர்வயதான தீர்க்கதரிசியின் பொய்யானது "தேவனுடைய ஒரு மனிதனின்" துர் அதிர்ஷ்டமான மரணத்திற்குக் காரணமாயிருந்தது (1 இரா 13 : 1 - 18). உண்மையில், தேவனுடைய சத்தியத்தை ஒரு பொய்யாக மாற்றிவிடக்கூடும். (ரோ 1 : 25) தேவனிடம் கூட ஒருவன் பொய்யுரைக்கக் கூடும் (அப் 5 : 4) பொய்யின் பிதா சத்தானைத் தவிர வேறு யாருமல்ல (யோவான் 8:44)

மிகவும் பிரபலமான பிற பொய்களில் சில யாவை? இவற்றை இரண்டு பிரிவுகளாக இங்கு விவாதிப்போம்.

### முதல் பிரிவு

1. "நீ விரும்பும் ஒரு சபையில் சேரலாம்" - இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு சபை இல்லையா? கீழ்க்கண்ட வசனப் பகுதிகளை வாசிக்க

வேண்டுகிறோம். மத்தேயு 16 : 18 - 19, அப். 20 : 28, எபேசி 1 : 22 - 23, 4 : 4 -6 5 : 23 - 32 அப். 2 : 47 உங்களுடைய வேதாகமத்தின்படி, கர்த்தருடைய சபையில் ஒருவரும் ஒருபோதும் "சேர்ந்தது" கிடையாது!!

2. "ஒருவன் விசுவாசித்தால் இரட்சிப்பு உடனே உண்டு" இவ்வாறு உங்கள் வேதாகமம் எங்கே போதிக்கிறது? கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் ஒரு விசுவாசத்தால் பாவிகள் இரட்சிக்கப்படுகிறார்கள். (யோவான் 3 : 16, 36, யாக்கோபு 2 : 14 26 அப். 10 : 34 - 35) இவ்வாறாக விசுவாசம் "தேவனுக்கு ஏற்ற கிரியை" எனக் கூறப்பட்டுள்ளது. (யோவான் 6 : 28 - 29)

3. "கர்த்தர் உனது ஆத்மாவிடம் சமாதானத்தைப் பேசட்டும், பின் கர்த்தரை உன் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொள்" - பல போதகர்களின் வாயிலிருந்து அடிக்கடி வெளிப்படும் பிரபலமான ஒரு அறிவிப்பு இது. ஆனால் இவ்வித அறிவிப்பு உங்கள் வேதாகமம் கூறுவதா? அவ்வாறு வேதாகமம் கூறுவதாக இருப்பின், அந்தக் குறிப்பிட்ட வசனப் பகுதியை எமக்குத் தெரிவியுங்கள். (மாற்கு 16 : 16, அப் 2 : 36 -38, ரோமர் 6 : 3 -4, 17 - 18).

4. "தெளித்தலும், ஊற்றுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருமுழுக்கு முறைகள்" பல நீதிமான்களும், நேர்மையானவர்களும் இந்த அறிவிப்பை நம்புகின்றனர். ஆனால் உங்கள் வேதாகமம் இவ்வாறு எங்கே போதிக்கிறது? தண்ணீரில் முழுகி எழுவது திருமுழுக்கு முறையாகும் (ரோமர் 6 : 3 -4, கொலோ 2 : 12).

5. "ஒருவர் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டார், எனவே அவர் திருமுழுக்கு பெறவேண்டும்". புதிய ஏற்பாட்டின்படி, இரட்சிக்கப்பட வேண்டுமானால், இயேசுவால் கட்டளையிடப் பட்ட திருமுழுக்கு முதலில் அவசியம். (மாற்கு 16 : 16 "பாவ மன்னிப்புக்கென்று' அல்லது இரட்சிக்கப்பட திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அப் 2 : 38ம் வசனம் போதிக்கிறது. மாறாக "பாவங்கள் மன்னிக்கப்பட்டிருப்பதால்" வேதாகமத்தின்படியான திருமுழுக்கு பெறப்படுவதில்லை.

6. "ஒரு பியானோ அல்லது ஆர்மோனியத்தை ஆராதனையில் உபயோகிப்பது ஒன்றும் பெரிய தவறல்ல" என துணிச்சலாகக் கூறப்படுகிறது. ஆனால், அதை உபயோகிக்க கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரா? ஒரு பியானோ வாசிப்பவரிடம், ஆராதனையில் ஏன் பியானோ வாசிக்கிறீர்கள் என்று கேட்ட போது, "ஏனென்றால் அதை நாங்கள் விரும்புகிறோம்" என பதிலளித்தார். ஆனால் கர்த்தர் அதை விரும்புகிறாரா? கிறிஸ்தவ ஆராதனையில் அதன் உபயோகத்தை ஒருபோதும் அவர் கட்டளையிடவில்லை. (எபே 5 :19, கொலோ 3 : 16, 1 கொரி 14 : 15)

# இரண்டாவது பிரிவு

1. பல சாக்குபோக்குகள் உண்மையில் பொய்களாக இருக்கின்றன. கடமையைச் சந்திக்க விருப்பமில்லாதபோது, சாக்குபோக்குகளைச் சொல்லுகிறோம் (லூ 14 : 15 -24) ஒரு ஞாயிறு காலை வேளையில் மீன் பிடிக்கச் சென்றுவிட்ட ஒரு சபை உறுப்பினரிடம், அந்த நேரத்தில் அவர் ஆராதனையில் கலந்து கொண்டிருக்க வேண்டுமே எனக் கேட்டபோது, அவர் அளித்த பதில், "சரி, நான் வீட்டிலிருந்தாலும் ஆராதனைக்கு வந்திருக்க இயலாது; ஏனென்றால் என் அருமை மனைவி சுகவீனமாக இருப்பதால் அவளைத் தனியே விட்டு வர முடியாது. சாக்குபோக்குகளை உற்பத்தி செய்வது மிகக் கடினமான காரியமல்ல; அவை எப்போதுமே தயாராகக் கிடைக்கின்றன.

2. வேறொருவர் கூறுகிறார். "நான் குடிக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்; ஆனால் அது அவ்வளவு கெட்ட செயல் அல்லவே; எல்லாரும் தான் குடிக்கிறார்கள்". கிட்டத்தட்ட எல்லா நிலைமைகளையும் சமாளிக்க நம்மிடம் பதில் தயாராக உள்ளது. பலர் தங்களுடைய சமுதாய குடிப்புக்கு சமாதானம் தேட வேதாகமத்தின் உதவியை நாடுகின்றனர். ஆனால் "சமுதாய குடிமக்கள்" இல்லையென்றால் பக்கா குடிகாரர்களே தோன்றியிருக்க மாட்டார்களே. சமுதாய குடிப்பு என்பது தேவனுக்கு முன்பாக ஒரு பாவச் செயல். ஒரு விசேடமான நாளில் பலர் ஒரு இடத்தில் கூடி குடிக்கும்போது, பிறரைக் குடிக்க அது தூண்டுவதால் அது பாவச் செயலாகும். பிறர் முன்னிலையில் தவறான முன் மாதிரியாக நடப்பது எந்த கிறிஸ்தவனும் சகியாத செயல். ஒருவனை கற்புக்கு விரோதமான பாவஞ்செய்யத் தூண்டுவது எவ்வளவு பெரிய குற்றமோ, அதுபோலவே ஒருவனைக் குடிக்கத் தூண்டுவதும் பாவச் செயலாகும்.

3. "ஆராதனைக்கு வரத்தவறியதற்காக சிறு பொய் கூறுவது ஒன்றும் பெரிய தவறல்ல; அது யாரையும் பாதிக்கிறதில்லையே, "என தனக்குத்தானே ஒருவர் சொல்லிக் கொள்ளுகிறார். இவ்வாறான எண்ணங்களைத் தந்தே சாத்தான் ஆயிரக்கணக்கான மக்களை அடிக்கடி ஏமாற்றுகிறான். நினைவிருக்கட்டும் இத்தகைய நடவடிக்கைக்குப் பதிலாக தேவன் சிலவற்றை சொல்லவிருக்கிறார். (எபி 10 : 25, 1 கொரி 16 : 1 -2, அப் 20 : 7 வெளி 1:10) கர்த்தரின் காரியத்தில் உங்களுடைய விருப்பத்தையும் ஆர்வத்தையும் அழித்தொழிக்க ஒரு நிச்சயமான வழி, நீங்கள் எதிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்ளுவது தான்.

4. "தங்கள் விருப்பம் போல வாழ தங்களுக்கு உரிமை உண்டு" என பலர் கூறுகின்றனர். "தங்களுடைய சொந்த வாழ்க்கை முறையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்" என அவர்கள் கூறுகின்றனர். தங்கள் விருப்பப்படியே எத்தனை முறையேனும்

மணம் முடிப்பதும், பின் மணம் முறிப்பதும் இதில் அடக்கம். தேவனுடைய புத்தகத்தில் கூறப்பட்டுள்ள நன்னடத்தையின் அடிப்படையையே இத்தகைய நிலையானது தகர்த்தெறிகிறது. தன்னுடைய வீட்டின் எதிர்காலம் பற்றி தனது கவலையை வெளியிட்டார் ஒரு பிரபலமான பெண்மணி; ஆனால் அந்த வேளையில் தானே அவர் நான்காவது நபருடன் வாழ்ந்து கொண்டிருந்தார். அதுவும் திருமணம் செய்யாமல், எவ்வளவு கெட்ட முன்னுதாரணம், கீழ்க்கண்ட வசனங்களை கவனமாகப் படித்து, உங்கள் வாழ்க்கையில் அவற்றை நடைமுறைப் படுத்துங்கள்; ஆதியாகமம் 2 : 24 - 26 மத். 19 : 3 -9 மாற்கு 10 : 2 - 12.

5. "கர்த்தரின் சபை காரியங்களுக்கு உதவ தங்களால் இயலவில்லை" என தங்கள் மனசாட்சியை சமாதானப்படுத்த முயலும் சபை உறுப்பினர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? (அப். 5 : 1 -11) புதிய ஏற்பாட்டில் மூன்று வார்த்தைகள் கொடுத்தல் பற்றிக் கூறுகின்றன; சக்தி, வளம், காரணம் (அப் 1 : 1 - 29, 1 கொரி 16 : 2, 2 கொரி 9 : 6 -7) ஒரு விலையுயர்ந்த கார், வீடு, ஆடம்பரமான ஆடைகள், 5 நட்சத்திர ஹோட்டலில் உணவு, இன்னும் வாழ்க்கையில் பல சௌகரியங்களையும் பலர் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவர்கள் கர்த்தருக்கு அளிக்கும் காணிக்கையோ கடைசிக் காசாக இருக்கும்.

வெட்கம்!

- ஹோலி

**பாடுகளில் சந்தோஷப்படுங்கள்**

***"பிரியமானவர்களே உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்***

***கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்."***

**(1 பேதுரு : 4 : 12, 13)**

**ஊழியர்களே கவனியுங்கள்**

***"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்."*** **(1 கொரி : 9 : 27)**

***நம்முடைய நிலை என்ன?***

# வியாதி பாவத்தின் விளைவா?

**"...... விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" - யாக்கோபு 5 : 15.**

**வியாதி பாவத்தின் விளைவா?**

**பதில் : ஆம்,........ இல்லை .......... ஒரு வேளை!**

கிறிஸ்தவர்கள் பாவஞ் செய்யக்கூடும் (1 யோ : 1 : 8) ஆனால், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்". (1 யோ 3 : 9) அதாவது விசுவாசமுள்ள கிறிஸ்தவன் வழக்கமாகவும் அறிந்தும் பாவத்தில் தொடரமாட்டான். நமது பாவங்களை அறிக்கையிடும்போது, தேவன் நம்மை மன்னிக்கிறார். (1 யோ 1 : 9).

வியாதி பாவத்தின் விளைவாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பிறவிக்குருடனாக இருந்த மனிதன் (யோவான் 9ம் அதிகாரம்) தனது பாவத்தினால் குருடனாகவில்லை. (வ 1-3) யாக்கோபு 5 : 15ம் வசனம் வியாதியை பாவத்துடன் இணைத்துக் கூறவில்லை. அது கூறுவதைப் பாருங்கள். ". . . அவன் (பிணியாளி) பாவம் செய்தவனானால் . . . "அதாவது, நோயாளி பாவத்துடனும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். பாவத்துடனிருந்தால் மன்னிப்பு தேவை. கிறிஸ்தவர்களாக இருப்பதால் மட்டும், வாழ்வில் ஏற்படும் நோய்களிலிருந்து கிறிஸ்தவர்களுக்கு விதிவிலக்கு இல்லை. (2 தீமோ 4 : 20 : 1 தீமோ 5 : 23, பிலி 2 : 25 -27).

என்ற போதிலும், பாவச் செயல்களால் ஏற்படும் சில நோய்களும் இருக்கின்றன. உதாரணமாக, தவறான உடல் உறவுகளால் விளையும் பால்வினை நோய்கள், தொடர்ந்து மதுபானம் அருந்துவதால் ஏற்படும் ஈரல், துணை நோய்கள். (1 கொரி 5 எபே 5 அதிகாரங்களைப் படிக்க)

ஆதிசபையில், சில கிறிஸ்தவர்களுக்கு சுகமளிக்கும் கொடைகள் வழங்கப்பட்டிருந்தன. (1 கொரி 12 : 9, 30) அவை உடனடியாக, முற்றிலுமாக நிச்சயமாக குணமளித்தன (அப் 19:11- 12) "பிணியாளியை இரட்சிக்கும்" "கர்த்தர் அவனை எழுப்புவார்" என யாக்கோபு 5 : 15 வசனம் கூறுவதைக் கவனியுங்கள். எவ்வித சந்தேகமோ, நிச்சயமற்ற தன்மையோ இந்த வாக்குறுதியில் இல்லை. (மாற்கு16 : 18) மேலும், விசுவாசமுள்ள நோயாளிக்கு சுகம் பெற நிபந்தனை எப்போதும் கிடையாது. இதுவும், இன்னும் பிற விசேட கொடைகளும் "நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்த" கொடுக்கப்பட்டன. (மாற்கு 16 : 20 ; எபி 2 : 4).

ஒரு கிறிஸ்தவன் பாவத்தின் வழியாக நோய்வாய்ப்பட்டிருந்தால் அவனுடைய பாவத்தை அறிக்கை செய்து, மனந்திரும்ப வேண்டிய இன்னும் அவனுக்கு அவசியமாக இருக்கிறது. நோய் தொடர்ந்த போதிலும், கிறிஸ்தவன் பாவஞ் செய்யக் கூடாது. (எபி 10 : 26) உடனடியாக ஒரு நோய்க்கு நிவாரணம் கிடைத்த போதிலும், சில பின் விளைவுகளும், குழப்பங்களும் அல்லது அந்நோயின் பிற விளைவுகளும் தொடரக் கூடும்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.**

## "அப்போஸ்தலர் நடபடிகள்" புத்தகத்தில் "முதன் முதலாக"

1. முதன் முதல் பரிசுத்த ஆவி இறங்குதல் — அப்போஸ்தலர் 2ம் அதி
2. முதன் முதல் சபை ஸ்தாபிக்கப்படுதல் — அப்போஸ்தலர் 2ம் அதி
3. முதல் சுவிசேஷப் பிரசங்கம் — அப்போஸ்தலர் 2ம் அதி
4. இயேசுவின் நாமத்தில் முதல் ஞானஸ்நானம் — அப்போஸ்தலர் 2 38
5. புதிய ஏற்ப்பாட்டு சபையில் முதல் ஆராதனை — அப்போஸ்தலர் 2 42
6. சபையில் நேர்ந்த முதல் களங்கம் அப்போஸ்தலர் 5ம் அதி
7. முதல் இரத்த சாட்சி (ஸ்தேவான்) — அப்போஸ்தலர் 7ம் அதி
8. முதல் நற்செய்தியாளன் (பிலிப்பு) — அப்போஸ்தலர் 8ம் அதி
9. முதல் புறஜாதியான் மனமாற்றம் — அப்போஸ்தலர் 10ம் அதி
10. முதல் புறஜாதி சபை — அப்போஸ்தலர் 11ம் அதி
11. முதல் சுவிசேஷ சுற்றுப்பயணம் — அப்போஸ்தலர் 13ம் அதி
12. ஐரோப்பாக் கண்டத்தில் முதல் சபை — அப்போஸ்தலர் 16ம் அதி

## கிறிஸ்தவம் மிகச் சிறந்த மார்க்கம்

| | | |
|---|---|---|
| 1. ஜீவ மார்க்கம் — | அப்போஸ்தலர் | 2 : 28 |
| 2. விசுவாச மார்க்கம் — | கலாத்தியர் | 3 : 9 |
| 3. உத்தம மார்க்கம் — | நீதி மொழிகள் | 11: 20 |
| 4. ஞான மார்க்கம் — | நீதி மொழிகள் | 4 :11 |
| 5. நீதியின் மார்க்கம் — | II பேதுரு | 2 :21 |
| 6. கர்த்தருடைய மார்க்கம் — | அப்போஸ்தலர் | 18 :25 |
| 7. தேவனுடைய மார்க்கம் — | அப்போஸ்தலர் | 18 :26 |

# விக்கிரக ஆராதனை

"ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு

விலகி ஓடுங்கள்" - (1 கொரி 10 : 14)

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக" - (1 யோவான் 5 : 21).

பழைய ஏற்பாடு காலத்தில் விக்கிரகங்களை வணங்கும் பாவமானது ஒரு பிரட்சனையாக இருந்தது. இஸ்ரவேலின் அரசனாகிய யெரொபெயாம் (1 இராஜாக்கள் 11 - 12) என்பவனை எடுத்துக் கொண்டால், அவன் பொன்னால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஒன்றைப் பெத்தேலிலும் மற்றொன்றை தாணிலும் நிறுவினான். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கும் இது ஒரு பெரிய பிரட்சனையாக இருந்தது. பல தடவைகளில் விக்கிரகங்களை வழிபடுவதிலிருந்து விலக வேண்டுமென அவர்கள் எச்சரிக்கப்பட்டதிலிருந்து நாம் இதை தெரிந்து கொள்ள முடிகிறது. இன்னும் விக்கிரக ஆராதனை ஒரு பிரட்சனையே. பல நாடுகளில் சமுதாயத்தின் சகல பகுதி மக்களையும், கற்றோரையும் உள்ளடக்கிய, ஒரு பிரட்சனையாக இது இன்று உள்ளது. விக்கிரக ஆராதனை என்றால் என்ன? அது ஏன் தவறு? இக்கேள்விகளுக்கும் இன்னும் பிற கேள்விகளுக்கும் இங்கு விடை காண்போம்.

ஒரு பொருளை அல்லது ஒரு உருவத்தை வணங்குவது தான் விக்கிரக ஆராதனை. பெரும்பாலும், உண்மைத் தேவனையோ அல்லது ஒரு கற்பனைக் கடவுளையோ பிரதிநிதித்துவப்படுத்த முயற்சிக்கிறது இந்த விக்கிரகம். தேவனை பிரதிநிதித்துவப்படுத்த உண்டாக்கப்படும் ஒரு விக்கிரகம் உண்மையில் அவரை இழிவுபடுத்துவதாக அமைகிறது. பொன், வெள்ளி, மரம் அல்லது வேறு பொருளால் உண்டாக்கப்படும் உருவங்கள்தான் விக்கிரகங்கள். ஆனால், பணம், பதவி, பிரபலமானது அல்லது இவை போன்றவைதான் ஒரு மனிதனுடைய விக்கிரகம் அல்லது 'கடவுள்' பொருளாசை என்பது விக்கிரக ஆராதனை (கொலோ 3 : 5) மத அடையாளங்களும் கூட சில சமயங்களில் விக்கிரக ஆராதனையாகிறது.

தங்களால் காணக்கூடாத தேவனை பிரதிநித்துவப்படுத்த மக்கள் பெரும்பாலும் தங்களால் காணவும் தொடவும் கூடிய விக்கிரகங்களைப் பயன்படுத்தி வணங்குகின்றனர். தங்களால் காணவும் தொடவும் முடியாத ஒன்றை நம்ப மக்கள் பெரும்பாலும் சிரமப்படுவர். ஆகவே, தங்களுடைய வழிபாட்டுக்கு உதவியாக பலமக்கள் விக்கிரகங்களை

உண்டாக்கிக் கொள்ளுகின்றனர். ஆனால், பழைய ஏற்பாட்டில் ஒரு விக்கிரகத்திற்கு முன்பு தலை வணங்குவதை தேவன் கண்டித்தார்: "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் . . . . . " (யாத். 20 : 4 - 5) புதிய ஏற்பாடும் விக்கிரக ஆராதனையை தெளிவாகக் கண்டிக்கிறது. (அப். 17 : 16 - 29, ரோமர் 1 : 22 - 25, 1 கொரி 6 : 9 - 11, வெளி. 21 : 8, 22 : 15).

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் . . . " (யோ 4 : 24) என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ரோமர் 1ம் அதிகாரத்தில், "சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்த "மக்களைப் பற்றி பவுல் எழுதுகிறார். (1:25) சிருஷ்டிகரையே வணங்காமல் ஏன் அவருக்குக் குறைந்தவைகளை வணங்க வேண்டும்?

வேறே தேவர்கள் உங்களுக்கு வேண்டாம் என்றும், விக்கிரகங்களை உருவாக்க வேண்டாம் என்றும் தேவன் இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்டார் (உபா 4 : 16 - 19) ஏனென்றால், ஒரே ஒரு உண்மையான தேவன் இருக்கிறார்; அவர் எரிச்சலுள்ள தேவனாக இருக்கிறார். (யாத். 20:1-5) நம்மை அர்ப்பணிக்கத்தக்கதான ஒரே ஒரு தேவன் மட்டுமே நமக்கு இருக்கிறார்.

"யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? பையிலிருக்கிற பொன்னைக் கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக் கொள்ளுகிறார்கள். அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான் அதை வணங்கி பணிந்து கொள்ளுகிறார்கள். அதை தோளின் மேல் எடுத்து, அதைச் சுமந்து, அதை அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்; அங்கே அது நிற்கும்; தன் இடத்தை விட்டு அசையாது; ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறு உத்திரவு கொடுக்கிறதுமில்லை. அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை" (ஏசாயா 46 : 5 -7 ) ஒரு மரத்தை வெட்டி, நெருப்பிலிட்டு தான் குளிர்காயவும், அதைக்கொண்டு உணவைத் தயாரிக்கவும், அதில் ஒரு தெய்வத்தையும் தனக்கு உண்டு பண்ணும் அறிவற்ற மனிதனைப் பற்றி 44ம் அதிகாரத்தில் ஏசாயா நமக்குக் காண்பிக்கிறார். "அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி, நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி

மன்றாடுகிறான்" (44 : 17). மக்கள் இவ்வாறு ஏன் செய்கின்றனர்? இதற்குப் பதிலாக, உண்மையான ஜீவனுள்ள தேவனை வணங்கி அவருக்கு ஊழியஞ் செய்வது புத்தியுள்ள செயலாகுமே. ஏனெனில், "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு மகிமை உண்டாவதாக" (எபே 3 : 20, 21).

ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார். அவரை நாம் ஆராதித்து ஊழியஞ் செய்ய வேண்டும். விக்கிரகங்களை விட்டு விலகிப் போகாத எல்லாரையும் அவர் எச்சரிக்கிறார். ". . . . தூனியக்காரரும், விக்கிரகாராதனைக் காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்! (வெளி 21:8) இதற்குப் பதிலாக தெசலோனிக்கேய மக்களைப்போல, கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து நாம் நித்திய ஜீவனை தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் " . . . . ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக் கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிற வருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே" (1 தெச 1 : 9 - 10) உண்மையான தேவனை சரியான வழியில் வழிபட்டு அவருக்கு ஊழியஞ்செய்ய நாம் ஒவ்வொருவரும் நிச்சயப்படுத்திக் கொள்வோம்.

**Ronnie Lowe**

எஸ்.எஸ். ராஜன்.

## கிறிஸ்தவனின் பாடுகள் கொஞ்ச காலந்தான்

**நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும், நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.**

**வெளி. 2 :10**

# பரலோக ராஜ்யத்தில் யார் பெரியவர்கள்?

பரலோக ராஜ்யத்தில் யார் பெரியவர்கள்? என்பதை ஆராயு முன் பரலோகராஜ்யம் என்றால் என்ன? என்பதை ஆராய்வோம். பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் பரலோக ராஜ்யம் என்றால் பரலோகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேதவாக்கியம் என்ன சொல்கிறது என்பதை சிந்திப்பதில்லை. பரலோக ராஜ்யம் என்றால் என்ன? என்பதை இயேசுவும், அப்போஸ்தலரும் கூறியிருக்கிறதை பார்ப்போமாக.

பரலோகராஜ்யம் என்பது தேவனுடைய ராஜ்யம். அதுவே சபை என்று இயேசு கூறியிருக்கிறார். (மத் 16 : 18 - 19, 19 : 23, 24) பரலோக ராஜ்யத்தை பவுல் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யம் என்னும் கிறிஸ்துவின் சபை என்றும் கூறியிருக்கிறார். (எபே 5 : 5 ரோமர் 16 : 16) ஆக பரலோக ராஜ்யம் என்பது 'சபை' ஆகும். பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் யார் பெரியவர்கள்? என்பதே இக்கட்டுரையின் கேள்வியாகும். இதை நாம் ஆராய்வோமாக.

**1. வசனத்தைக் கைகொண்டு போதிப்பவர்கள் (மத். 5 : 19)**

புகழ்பெற்ற வேதாகமக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்று வேதவசனத்தை மனப்பாடமாக சொல்லும் திறமை பெற்றவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள் என்றும், நன்றாக அடுக்கு மொழிகளினால் பிரசங்கிப்பதனால் மட்டும் பெரியவர்களாக இருக்கிறார்கள் என்றும், வெளிநாட்டு தொடர்பு அதிகமாக பெற்றிருப்பவர் பெரியவர் என்றும் சபைக்கு நகை அலங்காரத்துடனும், மோதிரத்திடனும் வருகிறவர்கள் பெரியவர்கள் என்றும், நன்றாக ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் தான் பரலோக ராஜ்யத்தில் பெரியவர்கள் என்றும் அநேகர் நினைக்கின்றனர். ஆனால் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து "வசனத்தைக் கை கொண்டு போதிப்பவனே" என்று கூறுகிறார். இவ்வுலகம் ஒருவனை வேறுவிதமாக மதிக்கிறது இயேசுவோ ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் மதிப்பிடுகிறார்.

வேத வசனத்தை படிப்பது, போதிப்பது மிக மிக சுலபமாக இருக்கலாம். ஆனால் அதின்படி நடப்பது மிக மிக கடினம். ஆகவே தான் யாக்கோபு 3 : 1ல் அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்றார். இயேசு, பரிசேயர், வேதபாரகர்களை மிகவும் கடிந்து கொண்டதற்கு காரணம் அவர்களின் போதனை ஊருக்குத்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை என்பது போல இருந்தது. (மத் 23 : 1 - 4) ஆனால் நமது ஆண்டவரோ அதின்படி செய்யவும் உபதேசிக்கவுமாக இருந்தார். (அப் 1 : 2).

எபிரேயர் 4:12ல் வேத வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்று வர்ணிக்கப் பட்டிருப்பது போதிக் கிறவருக்கும், போதனையை கேட்பவருக்கும்

உரியது என்று கூறியிருக்கிறது. போதிக்கிறவர் ஒருவேளை இப் புலகத்தால் மதிக்கப்படாதவராக இருக்கலாம். மோசேபோல திக்கு வாயும், மந்த நாவும் உள்ளவராக இருக்கலாம். எப்படி இருந்தாலும் வசனத்தை கைக்கொண்டு போதிக்கும் பொழுது அப்படிப் பட்டவரே பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் பெரியவர் என்று இயேசு கூறுகிறார்.

**2. தன்னைத் தாழ்த்துகிறவர்கள் : (மத் 18 : 4)**

இயேசுவின் சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான்? என்று கேட்டதற்கு இயேசு ஒரு சிறு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி நீங்கள் மனந் திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோகராஜ் யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போல தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனா யிருப்பான் என்றார். (மத் 18 : 1 - 4) மனத்தாழ்மைக்கு பிள்ளைகளை மாதிரியாக இயேசு காண்பிக்கிறார். சிறு பிள்ளை களுக்கும் மனத்தாழ்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மனத்தாழ்மை சிறு பிள்ளை களிடத்தில் இருக்கிறது. ஆகவே தான் இயேசு சிறு பிள்ளைகளை தம் ராஜ்யத்திற்கு ஒப்பாக பேசியிருக்கிறார். உண்மைதான் சிறுபிள்ளைகள் தான் தன் சரீரத்தையும், தன் மனதையும் தாழ்த்துவார்கள் என்பதை இன்னும் சிறுபிள்ளைகளிடத்தில் சோதித்து அறியலாம்! இவர் களிடத்தில் காணப்படுகிற இந்த அரிய பொக்கிஷத்தை நாம் பெற்று தன்னைத்தான் தாழ்த்தி இருக்க வேண்டும். இந்தத் தாழ்மை வெறும் உடையிலோ, நடையிலோ, நகையிலோ, நா வன்மையிலோ, தாடி வளர்ப் பதிலோ அல்லது தாடி, மீசை எடுப்பதிலோ ஏற்படுவதில்லை மனதிலே ஏற்பட வேண்டும்! அதுதான் மனத் தாழ்மை என்று வேதம் கூறுகிறது (நீதி 16 : 19) இயேசு மனத்தாழ்மையாக இருந்ததுபோல நாமும் இருக்க வேண்டும் (மத் 11 : 29).

நம்மைத் தாழ்த்தும் போது ஒருவேளை இவ்வுலகம் நம்மை ஏளனம் செய்யலாம். பழிக்குப்பழி வாங்கும் இவ்வுலகத்தில் நமது தாழ்மை குணம் உலகத்தாருக்கு வித்தியாசமாக இருக்கும். இருந்தாலும் பரவாயில்லை என தாழ்மை குணத்தோடு கிறிஸ்து வுக்குள் இருக்க வேண்டும். இதையெல்லாம் மறந்து உலகத் தார்போல நாமும் வாழ்ந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயி ருப்போம் (1 கொரி 15 : 19) ஆகவே நாம் நம்மை நாமே தாழ்த்துவோம். இப்படிச் செய்வ தினால் இவ்வுலகத்தில் சிறியவர் களாக எண்ணப்பட்டாலும் பர லோக ராஜ்யமாகிய கிறிஸ்து வின் சபையில் பெரிய வர்களாக எண்ணப்படுவோம் (மத் 18 : 4)

**3. பணிவிடைக்காரர்கள் (மத் 20 : 26, 27)**

இன்று சபையில் முதன்மை ஸ்தானத்தை போட்டி போட்டுக் கொண்டு பெற்றுக்கொள்ள அநேக சகோதரர்கள்

துடிக்கிறார்கள். தவிர புதிதாக ஸ்நானம் பெற்றவர்களே அதிகமாக விரும்புகிறார்கள். இப்படி விரும்புவது நல்லதுதான் ஆனால் இயேசு கிறிஸ்து என்ன கூறுகிறார் என்பதை முதலாவது அறிய வேண்டும். செபதேயுவின் தாய் தனது இரண்டு குமாரர்கள் யாக்கோபு, யோவான் ஆகிய இரண்டு பேரும் பரலோகராஜ் யத்தில் முதன்மையாக அதாவது பெரியவர்களாக இருக்க இயேசு விடம் விண்ணப்பிக்கிறார். அதாவது ராஜ்யத்தில் வலது, இடது இருபுறமும் தனது குமாரர்கள் இருந்தால் தனக்கு பேரும், புகழும் கிடைக்கும் என நினைத்தாளோ? எந்த தாயும் தனது குமாரன் கலெக்டராக இருந்தால், டாக்டராக இருந்தால் ஏன் இந்த நாட்டையே ஆளும் முதன் மந்திரியாக இருந்தால் பெருமைப்படுவாள் அல்லவா? அதுபோல யாக்கோபின் தாயும் நினைத்து இயேசுவினிடம் வந்து இப்பெருமைக்குரிய இடத்திற்காக விண்ணப்பிக்கிறாள்! ஆனால் ஆண்டவர் இயேசுவோ இவ் விண்ணப்பம் தகாத விண்ணப் பம் என்று கூறி இப்பெருமைக் குரிய இடத்தை கொடுப்பது என் காரியமல்ல என்று கூறிவிட்டார். (மத் 20 : 22 - 23) மேலும் இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டி ருந்த மற்ற 10 அப்போஸ்தலர் களும் யாக்கோபு, யோவான் ஆகிய இரண்டு பேரிலும் எரிச்சலானார்கள் (வச 24)

இயேசு தமது ராஜ்யத்தில் ஏற்ற தாழ்வு இருக்கக் கூடாது என்று கண்டிப்பாக இருந்தார். உயர்ந்தவன், தாழ்ந்தவன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று வேற்றுமை உணர்வு கூடாது. இப்படிப்பட்ட ஏற்ற தாழ்வு இருக்க கூடாது என்பதற்காக இயேசு உங்களில் எவனாகிலும் முதன்மையான வனாயிருக்க விரும்பினால் அதாவது பெரியவனாக இருக்க விரும்பினால் உங்களுக்கு பணி விடைக்காரனாக இருக்க வேண்டும் என்று கூறியிருக் கிறார் (வச 26, 27) ஒருவருக் கொருவர் பணிவிடை செய்யும் பொழுது வேற்றுமை உணர்வு வர வாய்ப்பில்லை.

மற்ற சகோதரருக்கு பணிவிடை செய்வதை அநேகர் கேவலமாக நினைக்கின்றனர். நான் என்ன அவருக்கு வேலைக் காரனா? என்று நினைத்து பணிவிடை செய்வதை விரும்பு வதில்லை. சபையில் முதன்மை ஸ்தானத்தை விரும்புகிற சகோ தரர் பணிவிடை செய்வதை விரும்புவதில்லை. இது எப்படி இருக்கிறதென்றால் உழைப்பில் லாமல் ஊதியம் வேண்டும் என்பது போல இருக்கிறது. பணி விடை செய்வதை ஏன் பாக்கிய மாக நினைப்பதில்லை? நமது ஆண்டவர் சகோதரர்களுக்கு பணிவிடை செய்வதை பாக்கிய மாக கருதினார். பணிவிடை செய்வதற்காகவே தான் வந்ததாக கூறினார் (மத் 20 : 28) நாமும் மற்ற சகோதரருக்கு பணிவிடை செய்யும் வாய்ப்பு கிடைக்கும்போது அதை நழுவ விடாமல் பாக்கியமாக கருதி பணிவிடை செய்வோம். பணி விடை செய்து பெரியவர்களாக இருக்க நாடுவோமாக!

**கே.பாஸ்கர்.**
**கோவில்பட்டி.**

# வேதாகமம் மட்டும் போதுமா?

# IS THE BIBLE ENOUGH?

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பல காரியங்களை நாம் அவசியம் படிக்க வேண்டும். ஆனால் நமது வாழ்வு பற்றி கர்த்தருடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ள வேறு சில சட்ட நூல்களும் உதவிகளும் நமக்குத் தேவையில்லையா?-இப்படி ஒரு கேள்வியை இன்று பலர் கேட்கிறார்கள்.

இக்கேள்விக்குச் சரியான விடைகாண அதே வேதாகமத்தைத் தான் நாம் நாட வேண்டும். கர்த்தருடைய சுவிசேஷத்தில் (வேதாகமம்) காணப்படாத வேறு சில காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரா என்பதை அறிய அவருடைய வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போமா?

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறியவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" என்பதாக 2 தீமோத்தேயு 3 : 16, 17 வசனங்களில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம் நமக்கு எல்லா நற்கிரியைகளையும் கொடுப்பதாக இருப்பின், அதில் கூறப்படாத எந்தக் காரியத்தைச் செய்து தேவனை பிரியப்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார்?

"சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" என யாக்கோபு 1 : 25ல் கூறப்பட்டுள்ளது. "பூரணம்" என்ற வார்த்தைக்கு "எதுவும் விட்டுப் போகாத முழுமையான" என பொருள். எதுவும் விட்டுப் போகாத முழுமையான வேதாகமத்தை நாம் கையில் வைத்துக் கொண்டு, தேவனுடைய விருப்பத்தை அறிய வேறு எந்த புதிய செய்தியை நாடி நாம் அலைய வேண்டும்?

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது" என்பதாக பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார். (2 பேதுரு 1:3), ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஏற்கனவே தேவன் நமக்குத் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வேறு சட்ட நூல்கள் நமக்குத் தேவையா? அல்லது வேறு எந்த உதவியை எதிர்பார்க்க வேண்டும்?

கர்த்தருடைய வசனம் சத்தியமானது, (யோவான் 17 : 7), வசனத்தைப் பூரணமாக தந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதில் நாம் நிலைத்திருப்போம்.

**ஜெர்ரி பார்பர்**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, NOV 1994
NOV 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27. KANGAYAM - 638 701

PRINTED MATTER
BOOK - POST